DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC.No. | 128/2024 | LW- | 2 | PW- | 2 |

| | |
|---|---|
| Name | : பாலகிருஷ்ணன் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னச்சாமி |
| Village | : நல்லூர் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 25/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சி மனு எண்.1081/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை)**

2) புகார்தாரர் சேகர் என்பவர் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். சேகர் எங்கள் குடும்பத்திற்கு நன்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். விபத்து நடந்து கூட்டமாக இருந்தது என்றாலும், அதை நான் சென்று பார்த்தேன் என்றாலும் சரிதான். நான் எனது முதல்விசாரணையில் நான் பழுது பார்த்த வாகனத்தை டிரையல் பார்ப்பதற்காக ஓட்டி சென்றதாக போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் விசாரணையில் சத்யா என்பவரது இருசக்கர வாகனம் வலது கை பக்கமாக சாலையிலும் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் சத்யாவிற்கு இடது கை புறமாக வாகனத்துடன் கீழே விழுந்து கிடந்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். விபத்து நடந்த பகுதியான சிறுகுடி – கோட்டையூர்

சாலை, சின்னையம்பட்டி பிரிவு ஆனது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் போது இறக்கமாக (தாழ்வாக) இருக்கும் என்றால் சரிதான்.

3) நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சேகர் என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்திருந்தால் சத்யா என்பவரை யார் சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்ற விபரத்தை தெரிவித்து இருப்பேன் என்றாலும், முன்னுக்குப் பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 வீட்டிற்கு தகவல் சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன சத்யா என்பவர் தான் வாகனத்தை சரியாக ஓட்ட தெரியாமல் வடக்கிலிருந்து தெற்காக தாழ்வாக உள்ள பகுதியில் வேகமாக வந்து வண்டியை கட்டுபடுத்தமுடியாமல் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த பகுதியானது ரோடு சேதமாகி அதன் காரணமாக ரோட்டில் பள்ளம் ஏற்பட்டு இருந்தது என்றால் சரிதான். அந்தப் பள்ளத்தில் தான் சத்யா என்பவர் வாகனத்தை ஓட்ட தெரியாமல் வந்து பள்ளத்தில் விட்டு விபத்து ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.02 18:57:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.128/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 128/2024 LW- 3 PW- 3

| | |
|---|---|
| Name | : பொன்னுச்சாமி (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : பழநி |
| Village | : குரும்பப்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 63/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சி மனு எண்.1081/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை)**

2) புகார்தாரர் சேகர் மற்றும் அவரது குடும்பத்தார் அனைவரையும் எனக்கு பக்கத்து ஊர்காரர்கள் என்ற முறையில் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடமான சிறுகுடி – கோட்டையூர் சாலை சின்னையம்பட்டி பிரிவானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும்போது தாழ்வாக இருக்கும் என்றால் சரிதான். நான் புளியம்பழம் பறிக்கும்பொழுது உடன் யாரும் இருந்தார்களா என்றால் கூலி ஆட்கள் ஐந்து பேர் இருந்தார்கள். வேலை முடித்து சாப்பிட்டு விட்டு சம்பவம் நடந்த இடத்திலிருந்து 50 மீட்டர் தூரத்தில் நான் படுத்து தூங்கிக்கொண்டிருந்தேன், கூலிவேலைக்கு வந்த ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். புளிய மரத்திற்கு கிழக்கு பக்கம் கண்மாய் உள்ளது என்றால் சரிதான். அந்தக் கண்மாய் ஆனது ரோட்டில் இருந்து இரண்டு அடி உயரம் இருக்குமா என்றால் 6 அடி உயரம் இருக்கும். நான் தூங்கிக்

கொண்டிருந்ததால் யார் எந்த திசையில் இருந்து வந்தார்கள் யாரால் விபத்து ஏற்பட்டது என்பதை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, சத்தம் கேட்டு பார்த்தபோது சத்யா என்பவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்த வகையில் வண்டி விழுந்து கிடந்தது, எதிரியின் வண்டியானது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற திசையில் அவரது வண்டி சாலையில் மறுபுறத்தில் விழுந்து கிடந்தது. கூலி வேலை செய்த ஆட்கள் சொல்லி தான் விபத்து எவ்வாறு நடந்தது என்பது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான், நான் பார்த்த வகையிலும் தெரியும்.

3) சத்யாவை சேகர் என்பவர் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லி இருந்தால் அது தவறானது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், நான் புளியம்பழம் பறிக்கவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சத்யா என்பவர் தான் வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டிவந்து வடக்கிலிருந்து தெற்காக தாழ்வாக உள்ள பகுதியில் வேகமாக வந்து வண்டியை கட்டுபடுத்தமுடியாமல் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த பகுதியானது ரோடு சேதமாகி அதன் காரணமாக ரோட்டில் பள்ளம் ஏற்பட்டு இருந்தது என்றால் சரியல்ல, நான் சம்பவ இடத்தில் இல்லை என்பதால் தான் சாலையில் இருந்த பள்ளம் குறித்து என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.02 18:57:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்